NTP010080902025

# இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் திருச்சிராப்பள்ளி

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 24-ம் நாள் புதன்கிழமை

**அமர்வு வழக்கு எண்.516/2025**

**CNR.No. TNTP01-008090-2025**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>மண்ணச்சநல்லூர் காவல் நிலைய<br>குற்ற எண்.73/2025. |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | | **சந்தோஷ்,**<br>த/பெ.ராஜகோபால்,<br>எண்.72, செங்குலி தெரு,<br>திருவெள்ளரை, மண்ணச்சநல்லூர் தாலுகா,<br>திருச்சிராப்பள்ளி. |
| சம்பவ நாள் | | 21.03.2025 |
| புகார் நாள் | | 21.03.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 21.03.2025 |
| எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 309(4) r/w 311, 351(3) of BNS Act கீழ் குற்றசாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | & | **முடிவாக,** அரசு தரப்பு எதிரி மீதான குற்றசாட்டான சட்டப்பிரிவுகள் 309(4) r/w 311, 351(3) BNS Act-ன் கீழ் எதிரிக்கு எதிராக முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என கு.வி.மு.ச.பிரிவு 235(1)-ன் கீழ் முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். |

| | | |
|---|---|---|
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 ஆன கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. அ.த.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ள எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.500/—யை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசுக்கு ஆதாயமாக்க உத்தரவிடுகிறேன். |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து **24.06.2026** தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் **திரு.A.பாலசுப்பிரமணியன்,** அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.D.R.தாணு** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.244/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக 18.11.2025ம் தேதியன்று அனுப்பப்பட்டது.

1. <u>**இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –**</u>

அரசு தரப்பு வழக்கானது, கடந்த 21.03.2025–ம் தேதி காலை 07.00 மணியளவில் மண்ணைச்சநல்லூர்–நொச்சியம் சாலையில் உள்ள அத்தாணி ராகவேந்திரா கார்டன் எதிரில் இவ்வழக்கின் புகார்தாரர் கிரி (எ)

சந்திரபிரகாஷ் என்பவரும், பட்டியல் சாட்சி–2 மீனாட்சி சுந்தரம் என்பவரும் நடந்து சென்ற போது, அங்கிருந்த எதிரி சந்தோஷ் ஏதோ பேசுவது போல் புகார்தாரரிடம் பேசி திடீரென்று கத்தியை எடுத்து புகார்தாரரின் கழுத்தில் வைத்து உயிர் பயத்தை ஏற்படுத்தி நான் திருவெள்ளரை ரவுடி சந்தோஷ் என் பெயரை கேட்டாலே இந்த ஏரியாவே பயப்படுவாங்க என்று மிரட்டி புகார்தாரர் கிரி (எ) சந்திரபிரகாஷ்–ன் சட்டை மேல் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.1,000/– பணத்தை பறித்து சாட்சிகள் பிடிக்க வருவதை பார்த்த எதிரி சந்தோஷ் யாராவது கிட்ட வந்தீங்கன்னா இந்த கத்தியாலேயே குத்தி கொலை செய்துவிடுவன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளீர். எனவே எதிரி மீது சட்டப்பிரிவுகள் 309(4) r/w 311, 351(3) BNS Act–ன் கீழ் தண்டிக்கப்படத்தக்க குற்றம் புரிந்தவர் என மண்ணச்சநல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.244/2025 ஆக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, திருச்சிராப்பள்ளியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது எதிரி மீது 309(4) r/w 311 BNS Act–ன் கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.516/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது 18.11.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் கு.வி.மு.ச பிரிவு 226ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் BNSS பிரிவு 250உ/இ பிரிவு 251ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 309(4) r/w 311, 351(3) BNS Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரியிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1** குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:</u>

6.1) அ.சா.1 திரு.மீனாட்சி சுந்தரம், த/பெ.கணேசன் தனது சாட்சியத்தில், நான் திருச்சி மண்ணச்சநல்லூர், புதுசெட்டி தெருவில் குடியிருந்து வருகிறேன். என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள். தற்பொழுது ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரியை தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 திரு.சந்திரபிரகாஷ், த/பெ.மதியழகன் தனது சாட்சியத்தில், நான் மண்ணச்சநல்லூரில் குடியிருந்து வருகிறேன். போலீஸ்காரர்கள்

கையெழுத்து கேட்டார்கள் வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 திரு.பிரகாஷ், த/பெ.சண்முகம் தனது சாட்சியத்தில், நான் தற்போது முசிறி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.03.2025–ம் வருடம் மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கிரி (எ) சந்திரபிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.73/2025, சட்டப்பிரிவுகள் 309(4), 311, 351(3) பிஎன்எஸ்எஸ்–ன் கீழ் வழக்கினை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.1** ஆகும். புகார் **அ.த.சா.ஆ.2** ஆகும்.

பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3,** மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4** தயார் செய்தேன். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றிய கத்தி **சா.பொ.1**. ரூ.500/–க்கான போட்டோ **அ.த.சா.ஆ.5** ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.6** மூலம் கைப்பற்றினேன். கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 91–ன் மூலம் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.த.சா.ஆ.7** ஆகும்.

பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவியபோது

அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

<u>தீர்வு:–</u>

இந்த வழக்கில் அரசு தரப்பில் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அ.சா.1, அ.சா.2, ஆகிய சாட்சிகள் எதிரிக்கு எதிராக எந்தவித சாட்சியங்களும் அளிக்கவில்லை.

அ.சா.3 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி. இவர் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை வாங்கியதை தவிர வேறு எதுவும் புலன் விசாரணையில் கண்டுபிடிக்கவில்லை. எதிரியிடமிருந்து கத்தி, ரொக்க பணம் ரூ.500/– கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

கத்தி எங்கிருந்து வந்தது, பணம் எங்கிருந்து வந்தது என்பது பற்றி விசாரணை எதுவும் செய்யப்படவில்லை. கத்தியை தடய ஆய்வுக்கு உட்படுத்தி அதில் உள்ள கைரேகை பதிவு பற்றி விசாரணை செய்யப்படவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை சான்ரூட்டும்படி எந்த சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை.

இவ்வழக்கில் புகார் கொடுத்தவர் முதல் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரை அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக கருதப்பட்டுள்ளனர். மேலும் அ.சா.1 கொள்ளையடிக்கப்பட்ட பணம் தனது பணம் தான் என்று தனது சாட்சியத்தில் சொல்லவில்லை.

**முடிவாக,** அரசு தரப்பு எதிரி மீதான குற்றசாட்டுகளான சட்டப்பிரிவுகள் 309(4) r/w 311, 351(3) BNS Act–ன் கீழ் எதிரிக்கு எதிராக முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 ஆன கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. அ.த.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ள எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.500/–யை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026–ம் வருடம் ஜூன் மாதம் 24–**ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 24.06.2026

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.மீனாட்சி சுந்தரம், த/பெ.கணேசன் |
| அ.சா.2 | திரு.சந்திரபிரகாஷ், த/பெ.மதியழகன் |
| அ.சா.3 | திரு.பிரகாஷ், த/பெ.சண்முகம் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

<u>Judicial  Form No.68</u>

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.2 | – | புகார் |
| அ.த.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4 | – | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | – | ரூ.500/–க்கான போட்டோ |
| அ.த.சா.ஆ.6 | – | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.7 | – | படிவம் 91 |

**சான்று பொருட்கள்** :–

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | கத்தி |

**எதிரி தரப்பு சாட்சிகள்** :– இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 24.06.2026